# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in**


**<u>முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறைத் தீர்ப்பாளர்</u>**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 2 / 2013</u>**

திரு. N. இராமசந்திரன்,
த/பெ. நாராயணன்,
கீழக்குப்பம், நடுக்குப்பம் அஞ்சல்,
காடாம்புலியூர் வழி
பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம். . . . . . . . மேல் முறையீட்டாளர்
(திரு. N. இராமசந்திரன்)

**எதிர்**

மேற்பார்வை பொறியாளர்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
காப்பர் மலை,
கடலூர் – 607 004 . . . . . . . எதிர்மனுதாரர்
(திரு T.V. சுந்தரம்,
செயற் பொறியாளர்/பன்ருட்டி)

**<u>கேட்புரை நாள்: 5–3–2013</u>**

**<u>ஆணை நாள் : 29 .4. 2013</u>**

திரு. N. இராமசந்திரன், த/பெ நாராயணன், கீழக்குப்பம் அவர்களின் 23–1–2013 நாளிட்ட மனுவானது மேல் முறையீட்டு மனு எண் 2/2013 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல்முறையீட்டு மனுவின் மீது மின் குறை தீர்பாளரின் கேட்புரை 5–3–2013 அன்று நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனு, எதிர் மனுதாரரின் பதிலுரை, கேட்புரை நாளில் இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ் கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

# ஆணை

## 1. மேல் முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர், காடாம்புலியூர் கிராமத்தில் அவருக்கு சொந்தமான சர்வே எண் 440ல் உள்ள ஆழ்துனை கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி 17–3–2010 அன்று பதிவு செய்துள்ள விண்ணப்பத்திற்கு சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

## 2. மேல்முறையீட்டு மனுவின் சுருக்கம்:–

மேல் முறையீட்டாளர், காடாம்புலியூர் கிராமத்திலுள்ள சர்வே எண் 440க்கு விவசாய மின் இணைப்பு வேண்டி சாதாரன முன்னுரிமையில் பதிவு செய்துள்ளார். விண்ணபத்தின் பதிவு எண்.64 நாள் 17–3–2010 ஆகும். மேற்கண்ட அதே சர்வே எண்ணில் மேல் முறையீட்டாளர்,49.7 கி.வாட் திறன் கொண்ட முந்திரிதோல் அரவை நிலையத்திற்காக ஒரு தொழில் மின் இணைப்பு 28–4–2011 அன்று பெற்றுள்ளார். மேற்கண்ட, தொழில் மின் இணைப்பு பெறும் பொழுது மேல்முறையீட்டாளர், தான் ஏற்கனவே சாதாரன முன்னுரிமையில் அதே சர்வே எண்ணில் பதிவு செய்துள்ள விவசாய மின் இணைப்பை, சுயநிதி திட்டத்தின் கீழ் மாற்றி கோர மாட்டேன் என்று உறுதி மொழி பத்திரம் வழங்கியுள்ளார். ஆனால், மேற்கண்ட விவசாய மின் இணைப்பு வேண்டி சாதாரன முன்னுரிமையில் (Normal priority) விண்ணபத்தினை, சுயநிதி திட்டத்தின் கீழ் வழங்க வேண்டும் என்று 15–10–2011ல் மனு செய்துள்ளார். மேற்கண்ட மனுவிற்கு 30–8–2012 வரை எவ்விதமான பதிலும் அளிக்கப்படாததால் கடலூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். கடலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், அவரின் விவசாய மின் இணைப்பு விண்ணபத்தை சுயநிதி திட்டத்தின் (SFS) கீழ் பதிவு செய்ய முடியாது என்று தீர்வு செய்துள்ளது. எனவே, அவர், இந்த மேல் முறையீட்டை, மின் குறை தீர்பாளரிடம் சமர்பித்துள்ளார்.

3. <u>மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பு</u> –

கடலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்புரை 19–12–2012 அன்று வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மனுதாரர் தொழில் மின்னிணைப்பு பெறுவதற்கு முன்னரே சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின்னிணைப்பு பெற்றால் மதிப்பீட்டு கட்டணம் அதிகமாக செலுத்தப்படவேண்டும் என்பதாலேயே தொழில் மின்னிணைப்பு பெற்றுக் கொண்டு பிறகு சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின்னிணைப்பு கோருவது தெரிய வருகிறது. மேலும், தொழில் மின்னிணைப்பு பெறும் போது மனுதாரரிடமிருந்து உறுதிமொழி ஏற்பு சான்று பெறப்பட்டது வாரிய விதி முறைகளில் இல்லாததால் உறுதிமொழி சான்று எவ்வாறு பெறப்பட்டது எனவும் அவ்வாறு பெறப்பட்ட உறுதிமொழி சான்று செல்லாததால் விவசாய மின்னிணைப்பை சுயநிதி திட்டத்தின் கீழ் உடன் வழங்க விசாரணையின்போது மனுதாரர் கேட்டுக் கொண்டார் விவசாய மின்னிணைப்பிற்காக பதிவு செய்துள்ள விண்ணப்பத்தில் குறிப்பிட்டள்ள புல எண்ணில் உள்ள அதே ஆழ் துளை கிணற்றில் இருந்துதான் தொழில் மின்னிணைப்பிற்கு தற்போது தண்ணீர் உபயோகப்படுத்துவது தெரியவருகிறது. விவசாய மின்னிணைப்பு பதிவு செய்த அதே புல எண்ணில் உள்ள ஆழ் துளை கிணற்றிற்கு அருகாமையிலேயே மனுதாரர் தொழில் மின்னிணைப்பு அளிக்க விண்ணப்பம் அளித்ததாலேயே சந்தேகத்தின் அடிப்படையிலேயே முன் எச்சரிக்கை நடவடிக்கையாக உறுதிமொழி ஏற்பு சான்று பெறப்பட்டு தொழில் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.*

*தற்போது விவசாய மின்னிணைப்பு சுயநிதி திட்டத்தின் கீழ் வழங்குவதாக இருந்தால் அதனால் வாரியத்திற்கு தோராயமாக ரூ.**6,00,000/–** வரை நஷ்டம் ஏற்பட்டுவது போன்ற செயலாக அமையும் என்பதோடு மட்டுமல்லாமல் தவறான ஓர் செயலுக்கு அனுமதி அளிப்பதற்கு முன்னுதாரணமாக அமையவும் வாய்ப்புள்ளது . மேலும், சாதாரண முன்னுரிமையில் பல ஆண்டுகளாக காத்திருப்போர்களை* over looking *செய்து மனுதாரருக்கு விவசாய மின்னிணைப்பு வழங்குவதாக அமையும் என்பதால் மனுதாரரின் விவசாய விண்ணப்பத்திற்கு விண்ணப்ப பதிவு எண்.**064/17.3.2010** சாதாரண முன்னுரிமையில் மட்டுமே மின்னிணைப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் சுயநிதி திட்டத்தின் கீழ் வழங்க இயலாது எனவும் இம்மன்றம் உத்தரவிடுகின்றது. "*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவில் உள்ள வாதங்கள்</u>–

மேல்முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

1. மேல்முறையீட்டாளர் கீழக்குப்பம் கிராமத்தில் நிலையாக வசித்து வருகிறார். அவர் காடாம்புலியூர் கிராமத்தில் சர்வே எண். 440க்கு விவசாய மின் இணைப்பு சாதாரண முன்னுரிமையில் விண்ணப்ப பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்துள்ளார் விண்ணப்ப பதிவு எண். 64 நாள் 17–3–2010.
2. 440 சர்வேயில் புதிய தொழிற் மின் இணைப்பு வேண்டி 14–06–2010ல் பதிவு செய்து 28–04–2011ல் தொழில் மின் இணைப்பு பெற்றுள்ளார். மேற்கண்ட தொழில் மின் இணைப்பில் 49.7 KW திறன் கொண்ட முந்திரிதோல் அரவை ஆலை நன்முறையில் இயங்கி வருகிறது.
3. மேற்கண்ட 440 சர்வே எண்ணில் சாதாரண மின் இணைப்பு அளிக்கப்பட்ட விண்ணப்பத்தினை மாற்றி சுயநிதி திட்டத்தின் கீழ் 15–10–2011ல் அனுமதிக்கும்படி மனு செய்துள்ளார். மேற்கண்ட மனுவிற்கு 30–8–2012 வரை எந்தவிதமான பதிலும் மின்வாரியத்தின் மூலம் அவருக்கு அளிக்கப்படவில்லை. இதற்கிடையே மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் அளிக்கப்பட்ட மனுவிற்கும் எந்தவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.
4. காடாம்புலியூர் சர்வே எண். 440 புதிய மின் தொழில் மின் இணைப்பு பெற்று நல்லமுறையில் இயங்கி வருகிறது. மேற்கண்ட தொழிற்சாலைக்கு இதுவரை 3,00,000 ரூபாய் மின் கட்டணம் செலுத்தியுள்ளார். ஆழ்குழாய் கிணற்றை சுற்றி சுமார் 35 ஏக்கர் நிலம் தரிசாக கிடக்கிறது. தானே புயல் நிவாரணமும் பெற்றுள்ளார். ஆகவே அவருக்கு விவசாய மின் இணைப்பு வழங்க ஆவணம் செய்யும் படி கேட்டுக்கொண்டுள்ளார்.
5. விவசாய மின் இணைப்பிற்கும், தொழிற் மின் இணைப்பிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. தற்பொழுது தானே புயலால் 35 ஏக்கர் முந்திரி பலா சேதம் அடைந்ததால்தான் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது. மின் வாரியம் கோரும் 6,00,000 ரூபாய் செலுத்தி மின் இணைப்பு பெற்று விவசாயம் செய்தால் விவசாயிக்கு வட்டி காசுகூட லாபம் கிடையாது. வானம் பொழித்துவிட்ட காரணத்தால் தற்பொழுது விவசாய மின் இணைப்பு தேவைப்படுகிறது.

விவசாய உற்பத்தி அவருக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் தேவைப்படுவதால் உடன் மின் இணைப்பு வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மின்சாரம் என்பது கடையில் வாங்கக்கூடியது அல்ல அவருக்கு மின்சாரம் வழங்காவிட்டால் சுமார் பத்து லட்ச ரூபாய் செலவு செய்து அமைத்துள்ள ஆழ்குழாய் கிணறு ஒன்றுக்கும் பயன்படாமல் போய்விடும். கடன் வாங்கி அமைத்துள்ள ஆழ்குழாய் கிணறு மின்சாரம் இல்லாமல் இயங்காமல் போனால் வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாமல் தற்கொலைசெய்து கொள்ள வேண்டியதுதான்.
7. சுயநிதி திட்டத்தின் ஆழ்குழாய் கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு கோரமாட்டேன் என்று அவராக எழுதி தரவில்லை. மின் செயற்பொறியாளர் எதற்கு அப்படி எழுதி வாங்கினார்கள் என்று தெரியவில்லை. மின்வாரிய சட்டத்திட்டத்தில் தொழில் மின் இணைப்பு பெற்றால் விவசாய மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று ஏதாவது சட்டத்திட்டங்கள் இருக்கிறதா என்பது தெரியாது விவசாய மின் இணைப்பு நான்தான்தருகிறேன். எழுதி வாங்குவதற்கும் இதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூறி உறுதிமொழியை டைப் செய்து அவரை ஏமாற்றி கையொப்பம் பெற்றுகொண்டு தற்பொழுது மின்சார மின் இணைப்பு கொடுப்பதற்கு மறுக்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.
8. <u>மேற்கண்ட ஆழ்குழாய் கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்க மறுத்தால்:–</u>

   i) போர்குழாய் கிணறு செலவு ரூபாய் 10,00,000 நஷ்டம்

   ii) 35 ஏக்கர் நிலம் தரிசாக கிடந்து விடும்.

   iii) உணவு உற்பத்தி விவசாயிக்கும் நாட்டுக்கும் குறையும்.
9. அனைத்து விவசாயிகளுக்கும் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கும்போது அவருக்கு மட்டும் வழங்க மறுப்பது அவருடைய ஜீவாதார உரிமையை (Fundamental Rights) பறிப்பதாக உள்ளது.
10. தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்திற்கு பிரேத்தியமாக வழங்கப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பு முன்னுரிமையின்படி மின் இணைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:–</u>**

எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

1. மனுதாரர் திரு ராமச்சந்திரன் அவர்கள் காடாம்புலியூர் வருவாய் கிராமம் சர்வே எண் 440–ற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி சாதாரண முன்னுரிமையில் விண்ணப்ப

பதிவு கட்டணம் ரூ.50/– செலுத்தி விண்ணப்ப பதிவு எண் 64/17–3–2010–ன் மூலம் விண்ணப்பம் பதிவு செய்துள்ளார்.

2. மனுதாரர் விவசாய மின் இணைப்பு பதிவு செய்துள்ள புல எண்ணில் உள்ள ஆழ் துளை கிணற்றிற்கு அருகாமையில் சுமார் 1.5 கிலோ மீட்டர் தொலைவு வரை உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் பாதைகள் ஏதும் விவசாய விண்ணப்பம் அளித்த நாளில் இல்லை.

3. மனுதாரர் திரு ராமச்சந்திரன் அவர்கள் அதே சர்வே எண்ணில் முந்திரி தோலிலிருந்து எண்ணெய் எடுக்கும் தெழிலுக்கு புதிய தொழில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் 14–06–2010–ல் பதிவு செய்துள்ளார். தொழில் மின் இணைப்பானது வாரிய விதிகளின்படி மூலதன மதிப்பீடு திட்டத்தின் அடிப்படையில் மின் நீட்டிப்பு பணிகள் முழுவதும் வாரிய செலவிலேயே செய்து மின் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது.

4. மனுதாரர் தொழில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்த போது விவசாய விண்ணப்பம் சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு அளிக்கப்படுவதாக இருந்தால் மின் பாதை நீட்டிப்பு செய்வதற்கான முழு மதிப்பீட்டு தொகையும் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

5. ஆனால் மனுதாரர் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு முதலில் பெறாமல் தொழில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் முழு நீட்டிப்பு பணிகளும் வாரிய செலவிலேயே செய்யப்பட வேண்டியிருந்ததால். மனுதாரர் திரு ராமச்சந்திரன் அவர்களிடமிருந்து சாதாரண முன்னுரிமையில் மட்டுமே விவசாய மின் இணைப்பு பெற்றுக்கொள்வேன் என உறுதி ஏற்பு சான்று பெறப்பட்டு ரூ 6,29,210/– மதிப்பீட்டு மின் கழக செலவில் நீட்டிப்பு பணி முடித்து தொழில் மின் இணைப்பு 28–4–2011ல் வழங்கப்பட்டு உள்ளது.

6. தொழில் மின் இணைப்பு பெற்றுகொண்ட பிறகு மனுதாரர் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்து விண்ணப்பத்திற்கு முன் மதிப்பீட்டு கட்டணம் ரூ 500/– செலுத்த அனுமதி வழங்க கோரியும் உடன் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வழங்க கோரியும் கடலூர் மாவட்ட மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் மனு செய்து அதற்கான மன்றத்தின் தீர்ப்புரையும் வழங்கப்பட்டது.

7. மனுதாரர் விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்பம் பதிவு செய்த போதே சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு கோரியிருந்தால் நீட்டிப்பு பணி செய்யப்படுவதற்குண்டான முழு மதிப்பீட்டு கட்டணமும் ரூ.6,29,210/– செலுத்திய பிறகே மின் இணைப்பு பெற்றிருக்க முடியும். ஆனால் தொழில் மின் இணைப்பு வாரிய

செலவில் நீட்டிப்பு பணிகள் செய்து வழங்கப்பட்ட பிறகு தற்போது சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு அளிக்கப்படுவதாக இருந்ததால் சுயநிதி திட்டத்தின் கீழ் எந்த வகையில் (ரூ.50,000/–, ரூ.25,000/– மேலும் ரூ.10,000/–) விருப்பம் தெரிவிக்கின்றாரோ அதை மட்டுமே செலுத்துவதாக அமையும்.

8. மனுதாரர் தொழில் மின் இணைப்பு பெறுவதற்கு முன்னரே சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெற்றால் மதிப்பீட்டு கட்டணம் அதிகமாக செலுத்தப்பட வேண்டும் என்பதாலேயே முதலில் தொழில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளிப்பதாக இருந்த சந்தேகத்தினாலேயே தொழில் மின் இணைப்பு வழங்கும் போது மனுதாரரிடமிருந்து உறுதி மொழி ஏற்பு சான்று பெறப்பட்டது. அவ்வாறு உறுதிமொழி ஏற்பு சான்று அளித்து விட்டு தற்போது சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு கோருவது நியாமற்ற செயலாகும்.

9. மேலும் 30–12–2011 அன்று கடலூர் மாவட்டத்தில் வீசிய தானே புயலால் அவருடைய நிலத்தில் இருந்த முந்திரி மற்றும் பலா சேதடைந்ததாகவும் அதனால்தான், சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்ற அவருடைய வாதம் ஏற்புடையது அல்ல. ஏனெனில் விவசாய மின் இணைப்பு கோரும் அவருடைய விண்ணப்பத்தை சாதாரண முன்னுரிமையில் இருந்து சுயநிதி திட்டத்தின் கீழ் மாற்றுவதற்கு 15–10–2011 அன்றே மனு செய்ததாக மனுதாரரே குறிப்பிட்டுள்ளார்.

10. விவசாய மின் இணைப்புகள் கோரும் அனைவருமே ஆழ்துளை கிணறு அமைத்து விட்டுதான் விவசாய விண்ணப்பம் அளித்து வரிசை கிரமமாக முன்னுரிமை வரும்போது (சாதாரணம் மற்றும் சுயநிதி திட்டம்) மின் இணைப்பு பெற்று கொள்கின்றனர். எனவே மனுதாரர் ஆழ்துளை கிணறு அமைத்துவிட்டார் என்ற ஒரே காரணத்திற்காக உடனடியாக விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது.

11. மனுதாரர் திரு ராமச்சந்திரன் அவர்கள் ஊரக வளர்ச்சி துறையில் உதவி இயக்குனராக இருந்து பணி ஓய்வு பெற்றவராவார். எனவே அவரை ஏமாற்றி உறுதி மொழி சான்றில் கையொப்பம் பெற்றுகொள்ளப்பட்டது என்ற கூற்று ஏற்று கொள்ள கூடியது அல்ல.

12. விவசாய மின் இணைப்பிற்காக பதிவு செய்துள்ள விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்ணில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்துதான் தொழில் மின் இணைப்பிற்கு தற்போது தண்ணீர் உபயோகப்படுத்துவது தெரியவருகிறது.

13. மனுதாரரின் மின் இணைப்பு கோரும் இடம் 18–9–2012 –ல் ஆய்வு செய்யப்பட்டது. தொழிற்சாலை மின் இணைப்பில் இருந்து விவசாய மின் இணைப்பு கோரும் இடம் 50

மீட்டர் தொலைவில் உள்ளது. தொழிற்சாலை உபயோகத்திற்கான தண்ணீர் தற்போது விவசாய மின் இணைப்பு கோரும் ஆழ்துளை கிணற்றில் இருந்து தான் எடுக்கப்பட்டு உபயோகப்படுத்துவதும் கண்டறியப்பட்டது. இதை தவிர இந்த சர்வே எண்ணில் வேறு ஆழ்துளை கிணறு இல்லை என ஆய்வில் உறுதி செய்யப்பட்டது.

14. தற்போது விவசாய மின் இணைப்பு சுயநிதி திட்டத்தின் கீழ் வழங்குவதாக இருந்தால் அதனால் வாரியத்திற்கு தோராயமாக ரூ.6,30,000/– வரை நஷ்டம் ஏற்படுத்துவது போன்ற செயலாக அமையும் என்பதோடு மட்டுமல்லாமல் தவறான ஓர் செயலுக்கு அனுமதி அளிப்பதற்கு முன்னுதாரணமாக அமையவும் வாய்ப்புள்ளது. மேலும் சாதாரண முன்னுரிமையில் பல ஆண்டுகளாக காத்திருப்போர்களை **Over looking** செய்து மனுதாரருக்கு விவசாய மின் இணைப்பு வழங்குவதாக அமையும் என்பதால் மனுதாரரின் விவசாய விண்ணப்பத்திற்கு பதிவு எண்.064/17.3.2010 சாதாரண முன்னுரிமையில் விவசாய மின் இணைப்பு வழங்கப்பட தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலையில் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கும் போது அவருக்கு மட்டுமேவழங்க மறுப்பதாகவும், அவருடைய ஜீவாதார உரிமையை பறிப்பதாகவும் கூறும் அவருடைய கூற்று ஏற்கதக்கதல்ல.

15. மனுதாரரின் இவ்விவசாய விண்ணப்பம் தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான சிறப்பு முன்னுரிமையில் மின் இணைப்பு உரிய ஆணை இல்லாமல் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. <u>மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை:–</u>

மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகிய இருவரும் தங்களின் வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 5–3–2013 அன்று மின்குறை தீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:–</u>

7.1 மேல்முறையீட்டாளர் திரு. N. ராமசந்திரன் அவர்கள், கேட்புரை நாளில், அவருடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மேலும் வலியுறுத்தினார்.

7.2 தனக்கு சொந்தமான 35 ஏக்கர் நிலத்தில் விவசாயம் பண்ணுவதற்கு விவசாய மின் இணைப்பு தேவைப்படுவதாக கூறினார். மேலும், அவர் அந்த நிலத்தில் ஏற்கனவே, முந்திரி தோலிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு பெற்றதினால் அவருடைய விவசாய மின் இணைப்பிற்கு சுய நிதி திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்க முடியாது

என்று கூறுவது மின்சார வாரியத்தின் விதிகளுக்கு புறம்பானது என்று கூறினார். மேலும் சுயநிதி திட்டத்திற்கான விதி முறைகளில் அவ்வாறு எதுவும் இல்லை என்றும் வாதிட்டார்.

7.3 தொழிற்சாலைக்கு மின் இணைப்பு பெறும் பொழுது, தன்னிடம் உறுதிமொழி கொடுத்தால்தான் மின் இணைப்பு தரமுடியும் என்று தெரிவிக்கப்படடதால் தான் அவ்வாறு உறுதி மொழி கொடுத்ததாகவும், ஆனால் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின்இணைப்பு பெறுவதற்கு விதிக்கப்பட்ட வழிமுறைகளில் அதுபோன்ற காரணங்கள் இல்லையெனில், அந்த உறுதிமொழி வாங்கியது தவறு என்றும், அப்படி தவறாக வாங்கிய உறுதிமொழியின் காரணமாக விவசாய மின் இணைப்பிற்கான விண்ணப்பத்தினை சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்ய மறுப்பது அவரின் ஜீவாதார உரிமையை பாதிக்கும் என்றும் வாதிட்டார்.

7.4 சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு தகுதியான எந்த விண்ணபமும் விண்ணப்பதாரர் விரும்பும் பட்சத்தில் அத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கூறினார். மேலும், விவசாய மின் இணைப்பு சுய நிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்ய மறுக்கப்பட்டால் தனக்கு மிகவும் கஷ்டம் என்றும் தெரிவித்தார்.

7.5 மேலும், விவசாய மின் இணைப்பு கோரும் ஆழ்துணை கிணற்றில் உள்ள நீர் தற்பொழுது தொழிற்சாலை இணைப்பிற்கு 15 HP திறன் கொண்ட மின்சார மோட்டார் மூலம் இறைக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்தார்.

**8. <u>எதிர் மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:–</u>**

8.1 எதிர் மனுதாரரின் சார்பில் திரு. சுந்தரம், செயற் பொறியாளர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார். எதிர்மனுதாரரின் பதிலுரையில் கொடுக்கப்பட்டுள்ள வாதங்களை அவர் வலியுறுத்தினார்.

8.2 மேல் முறையீட்டாளரின் விவசாய விண்ணபத்தினை 17–3–2010 அன்று பதிவு செய்யும் பொழுது அதன் அருகில் உயர் அழுத்த மின்பாதையோ அல்லது தாழ்வழுத்த மின்பாதையோ இல்லை. அவர்கள் தன்னுடைய விவசாய மின் இணைப்பை பதிவு செய்தவுடன், சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்திருந்தால் அவரின் மின் இணைப்பிற்கான மதிப்பீட்டின் முழுத்தொகையையும் செலுத்த வேண்டும். அப்பொழுது அதன் அருகில் மின்பாதை எதுவும் இல்லை என்பதினால் சுமார் 1.5 கி. மீ. தூரத்திற்கு உயர்அழுத்த பாதை மற்றும் மின்மாற்றி அமைத்து அதற்குண்டான மதிப்பீட்டு தொகை செலுத்த வேண்டும். ஆனால் விவசாய மின் இணைப்பு விண்ணப்பத்தை சமர்பித்த பின்பு மேல்முறையீட்டாளர் அதே சர்வே எண்ணில் ஒரு தொழிற்சாலைக்கான மின் இணைப்பு வேண்டி விண்ணபித்துள்ளார் தொழிற் சாலைக்கான விண்ணபத்திற்கான மின் இணைப்பு வழங்கும் பொழுது மின் நீட்டிற்புகான செலவு தொகை, வாரியக்கணக்கில் வைக்கப்படும். எனவே வாரியம் ரூ.6,29,210/– மதிப்பீட்டில், மின்

நீட்டிப்பிற்க்கான தேவைகளை தன்னுடைய செலவில் முடித்து தொழிற்சாலைக்கான மின் இணைப்பை வழங்கியுள்ளது. மேற்கண்ட மின் இணைப்பு வழங்கப்பட்டதினால், மேல் முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு, கோரும் ஆழ்துளை கிணற்றிற்கு மிக அருகில் வாரியத்தின் மின்பாதை உள்ளது. எனவே, தொழில் மின் இணைப்பு பெறுவதற்கு முன்பே விவசாய மின் இணைப்பை சுயநிதி திட்டத்தில் பதிவு செய்தால், மதிப்பீட்டுதொகை அதிகமாக செலுத்தப்பட வேண்டும் என்பதினால், மேல் முறையீட்டாளர், தொழில் மின் இணைப்பை பெற்றுக் கொண்டு அதன்பின் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பை பெற விரும்புவதை தெரிவித்துள்ளார் என்று வாதம் செய்தார்.

8.3 ஏற்கனவே விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பெறப்பட்ட இடத்தில், தொழில் மின் இணைப்பு விண்ணப்பமும் பெறபட்டதினால், மேல்முறையீட்டாளர் தொழில் மின் இணைப்பு பெறுவதற்கு முன்னதாக சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெற்றால் மதிப்பீடு கட்டணம் அதிகம் செலுத்தப்பட வேண்டும் என்பதனாலேயே தொழில் மின் இணைப்பு பெற்றுக் கொண்டு விவசாய மின்னிணைப்பை செலவு எதுவுமில்லாமல் பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் மனுதாரர் தொழில் இணைப்பை முதலில் கோருகிறார் என்ற சந்தேகமிருந்ததால் தான் மின்னிணைப்பு வழங்கும் பொழுது மனுதாரரிடமிருந்து உறுதி மொழி (agreement) சான்று பெறப்பட்டது என்றும் அவ்வாறு உறுதி மொழி ஏற்று சான்று அளித்துவிட்டு, தற்போது சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு கோருவது நியாயமற்றது என்று வாதிட்டார்.

8.4 செயற்பொறியாளர், மேலும், இந்த முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம், அவரின் சாதாரண முன்னுரிமையில் (Normal priority) ல் வழங்கதக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். எனவே, மேல்முறையீட்டாளரின் ஜீவாதார உரிமையியல் பாதிப்பு இல்லை என்றும் வாதிட்டார். மேலும், சுயநிதி திட்டத்தின் கீழ் குறைந்த செலவில் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு தவறான முன்னுதாரணமாக இது அமைய வாய்ப்புள்ளது என்றும், வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீடு தொகை அதிகமாக உள்ளது என்பதினால் சாதாரன முன்னுரிமையில் பல ஆண்டுகளாக காத்திருப்போரை, புறக்கணித்து, மேல் முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்குவது போல் ஆகும் என்றும் வாதிட்டார்.

8.5 மேலும், மேல் முறையீட்டாளர், விவசாய மின் இணைப்பு பெறுவதற்காக ஏற்படுத்திய ஆழ்துளை கிணற்றில், தற்பொழுது தொழில் மின் இணைப்பிற்கு தேவையான தண்ணீருக்காக 15 HP மோட்டார் மூலம் தண்ணீர் இறைக்கப்படுகிறது என்றும், மேற்படி, ஆழ்குழாய் கிணறு தொழில் மின் இணைப்பில் உபயோகப்படுத்த படுவதால் அந்த ஆழ்குழாய் கிணற்றில் விவசாய மின் இணைப்பு வழங்க முடியாது என்றும் வாதிட்டார்.

**9 <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு :–</u>**

மேல்முறையீட்டாளரின், மேல் முறையீட்டு மனுவிலுள்ள வாதங்கள் எதிர் மனுதாரரின், பதிலுரையிலுள்ள வாதங்கள், மற்றும் கேட்புரை நாளில் இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதங்களையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது. இந்த வழக்கை பொறுத்தவரையில், எதிர்மனுதாரர், மேல் முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தை சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்ய மறுக்கபடுவதற்கான காரணங்களாக கூறப்படுவது யாதெனில் (1) மேல்முறையீட்டாளர் சர்வே எண். 440ல் உள்ள தொழில் மின் இணைப்பு பெறும் பொழுது, அதே சர்வே எண்ணில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விவசாய மின் இணைப்பை சுயநிதி திட்டத்தின் கீழ் கோர மாட்டேன் என்று உறுதி மொழி பத்திரம் வழங்கியுள்ளார் என்றும் (2) விவசாய மின் இணைப்பு கோரும் ஆழ்துளை கிணறு தொழில் மின் இணைப்பிற்கு பயன்படுவது என்பதுவும் ஆகும். எனவே, கீழ் கண்டவைகளை வழக்கெழு வினாக்களாக தீர்மானிக்கப்படுகின்றன.

(அ) மேல் முறையீட்டாளர் தன்னுடை முந்திரிதோல் அரவை ஆலைக்கான தொழில் மின் இணைப்பு பெறும் பொழுது அந்த ஆணையில் உள்ள சர்வே நம்பரில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விவசாய மின் இணைப்பிற்கு சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு கோரமாட்டேன் என்று உறுதி மொழி பத்திரம் அளித்திருப்பதால் அவரின் மேற்கண்ட விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்ய தகுதி அற்றது என எதிர் மனுதாரர் கூறும் வாதம் ஏற்புடையதா ?

(ஆ) சர்வே எண் 440ல் உள்ள ஆழ்துறை கிணறு முந்திரி தோல் அரவை ஆலைக்கு தேவையான நீரை இறைக்க (பம்ப் செய்ய) பயன்படுத்துவதால், அந்த ஆழ்குழாய் கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வழங்க முடியுமா ?

**10 <u>வழக்கெழு வினா 'அ' விற்கான தீர்வு:–</u>**

10.1 மேல்முறையீட்டாளர், தன்னிடம், தொழில் மின் இணைப்பு வேண்டும் என்றால், நிலுவையிலுள்ள விவசாய மின்னிணைப்பை சுயநிதி திட்டத்தின் கீழ் பெற விண்ணப்பம் செய்யமாட்டேன் என்று உறுதி மொழி பத்திரம் வேண்டும் என்று வலியுறுத்தியதினால்தான் அந்த உறுதிமொழிப்பத்திரம் அளிக்கப்பட்டது என்றும் எழுதி வாங்குவதற்கும் விவசாய மின் இணைப்பு வழங்குவதற்கும் சம்பந்தமில்லை என்று அவரை ஏமாற்றி கையொப்பம் பெற்றுக் கொண்டு, தற்பொழுது அந்த உறுதி மொழிதான் காரணம் என்று கூறி தன்னுடைய விவசாய விண்ணப்பத்தை சுயநிதி திட்டத்தில் ஏற்க முடியாது என்று கூறுவது நியாயமற்றது என்று வாதிட்டார்.

10.2 மேலும், அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் பொழுது, தனக்குமட்டும் வழங்க மறுப்பது அவருடைய ஜீவாதார உரிமையை பறிப்பதாக உள்ளது என்றும் வாதிட்டார்.

10.3 மேலும் மேற்கண்ட ஆழ் குழாய் கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்க மறுப்பதினால், தனக்கு போர் குழாய் கிணறு செலவு ரூ.10,00,000/– நஷ்டம் என்றும், 35 ஏக்கர் நிலம் தரிசாக கிடந்துவிடும் என்றும், உணவு உற்பத்தி நாட்டிற்கு குறையும் என்றும் வாதிட்டார்.

10.4 எதிர் மனுதாரர் மேல்முறையீட்டாளர், தன்னுடைய முந்திரி தோல் அரவை ஆலைக்கு, மின் இணைப்பு பெறும் பொழுது அதே சர்வே நம்பரில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விவசாய மின் இணைப்பிற்கு சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு கோரமாட்டேன் என்று உறுதி மொழி பத்திரம் அளித்துள்ளார். எனவே, அவரின் உறுதி மொழிக்கிணங்க அவர் அவரின் 17–3–2010 அன்று பதிவு செய்யப்பட்ட விவசாய மின் இணைப்பு விண்ணபத்தை சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்ய கோர முடியாது என்று வாதிட்டார். மேலும் மேல் முறையீட்டாளர் ஊரக வளர்ச்சி துறையில் உதவி இயக்குனராக இருந்து பணி ஓய்வு பெற்றவர் எனவே அவரை ஏமாற்றி உறுதிமொழி சான்றில் கையொப்பம் வாங்கப்பட்டது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வாதிட்டார்.

10.5 எதிர்மனுதாரர், கடலூர் அரசு வழக்கறிஞரிடமிருந்து 22.3.2013 அன்று பெறப்பட்ட சட்டகருத்துருவின் நகல் ஒன்றையும் தன்னுடைய வாதத்திற்கு துணையாக சமர்ப்பித்துள்ளார். அந்த கருத்துருவில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*“உதவி மின்பொறியாளர் திரு. ராமச்சந்திரன் இந்த வகையில் விவசாய சுயநிதி மனு கொடுக்கும் பட்சத்தில் அதனால் மின்வாரியத்திற்கு எந்த விதத்திலும் நிதிஇழப்பு ஏற்படக்கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு முன் எச்சரிக்கை உணர்வுடன் உறுதிமொழி ஆவணத்தை திரு. ராமச்சந்திரன் என்பவரிடத்தில் பெற்றுள்ளார் என்பது இந்த ஆவணத்தை பெற்ற சூழ்நிலையை நன்கு ஆய்வு செய்யும்பொழுது தெளிவாகிறது.*

*27.8.2010 தேதியிட்ட முத்திரைத் தாளில் ராமச்சந்திரன், உதவி மின்பொறியாளருக்கு எழுதிக் கொடுத்த உறுதிமொழி ஆவணத்தை நன்கு பரிசிலனை செய்ததில் அந்த உறுதிமொழி ஆவணத்தில் அளித்த உறுதிமொழிப்படி திரு. ராமச்சந்திரன் அவர்கள், விவசாய இணைப்பில் மின்னிணைப்பு கேட்பதற்கு உரிமை இல்லை என்பது நன்கு தெளிவாகிறது. மேற்குறிப்பிட்ட உறுதிமொழி ஆவணத்தை உதவி மின் பொறியாளர் வாங்குவதற்கான சூழ்நிலையை ஆராய வேண்டியுள்ளது. இந்த விஷயத்தை கூர்ந்து நோக்கும்போது திரு. ராமச்சந்திரன், புலன் எண்.440–இல் முன்பு பதிவுசெய்யப்பட்ட விவசாய விண்ணபத்தில் சாதாரண மின்னிணைப்பு வரிசை தவிர, சுய நிதி திட்டத்தின் கீழ் நானோ, என் வாரிசுதாரரோ மின்னிணைப்பு*

*கோரமாட்டோம் என்று உறுதிமொழி அளித்துள்ளார். அப்போதைய உதவி மின்பொறியாளர் வருங்காலத்தில் திரு. ராமச்சந்திரன் இந்த வகையில் விவசாய சுயநிதி மனு கொடுக்கும்பட்சத்தில் அதனால் மின்வாரியத்திற்கு எந்தவிதத்திலும் நிதி இழப்பு ஏற்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு முன் எச்சரிக்கை உணர்வுடன் உறுதிமொழி ஆவணத்தை திரு. ராமச்சந்திரன் என்பவரிடத்திலிருந்து பெற்றுள்ளார் என்பது இந்த ஆவணத்தை பெற்ற சூழ்நிலையை நன்கு ஆய்வு செய்யும்போது தெளிவாகிறது. இந்தப்படிக்கு திரு. ராமச்ந்திரன் என்பவரிடமிருந்து உறுதிமொழி பத்திரதை அந்த உதவி மின் பொறியாளர் பெறாமல் இருந்தால் பின்னிட்டு மின் வாரிய தணிக்கை மறுப்புரை மற்றும் தொடர்ச்சியான தொடர் நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். அகவே, திரு. ராமச்சந்திரன் எழுதிக்கொடுத்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தில் சட்ட ரீதியாக செல்லுபடியான ஆவணம் என்பதும் அந்த உறுதிமொழியை மீறுவதற்கு சட்டத்தில் வழியில்லை என்றும், திரு. ராமச்சந்திரன் தான் எழுதிக்கொடுத்த உறுதிமொழியை மீறி விவசாய சுயநிதி விண்ணப்பத்தைக் கோருவது என்பது சட்டப்படி சரியான செயல் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.”*

**10.6** எதிர் மனுதாரரின் சார்பில் கலந்து கொண்ட செயற் பொறியாளர், மேல்முறையீட்டாளருக்கு சாதாரன முன்னுரிமையில் விவசாய மின் இணைப்பு வழங்கப்படும் என்றும், அவரின் உறுதிமொழியின் படி, அவருக்கு சுயநிதி திட்டத்தின் கீழ் மட்டும்தான் விவசாய மின் இணைப்பு மறுக்கப்படுகிறது ஆனால் சாதாரண முன்னுரிமையில் மின்னிணைப்பு வழங்க மறுக்கப்படவில்லை. எனவே, ஜீவாதார உரிமைகள் பாதிக்கபடவில்லை என்று வாதாடினார்.

**10.7** விவசாய மின் இணைப்பு கோரும் அனைவருமே, ஆழ்துறை கிணறு அமைத்துவிட்டுத்தான் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் அளித்து வரிசை கிரமமாக முன்னுரிமை வரும் பொழுது, (சாதாரணம் மற்றும் சுயநிதி திட்டம்) மின் இணைப்பு பெற்றுக் கொள்கிறார்கள். எனவே, அவர் ஆழ்துளை கிணறு அமைத்துவிட்டார் என்ற ஒரே காரணத்திற்காக உடனடியாக மின் இணைப்பு வழங்க முடியாது என்றும் வாதம் வைக்கப்பட்டுள்ளது.

**10.8** மேல்முறையீட்டாளரும், எதிர் மனுதாரரும் உறுதி மொழி பத்திரத்தை பற்றி வாதிட்டுள்ளதால் அந்த உறுதி மொழி பத்திரத்தின் வாசகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ __உறுதிமொழி__*

*தமிழ்நாடு மின்சார வாரியம், கடலூர் மின்பகிர்மான வட்டம், உதவி மின் பொறியாளர் / இ.ப./காடாம்புளியூர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வது.*

*திரு. நா. இராமச்சந்திரன் த/பெ. நாராயணன், கீழக்குப்பம் ஆகிய நான் காடாம்புளியூர் ஊராட்சிக்குட்பட்ட காடாம்புளியூர் பஞ்சாயத்தில் **14–6–2010** நாளன்று எனக்கு சொந்தமான*

*நிலத்தில் சர்வே எண்.440–ல் முந்திரி தோலிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை அமைக்க திட்டமிட்டு தளவாடங்கள் வாங்கி ஒயரிங் செய்து தயார் நிலையில் உள்ள தொழிற்சாலை மின் இணைப்பிற்குறிய விண்ணப்பத்தினை பதிவு செய்து அதற்குறிய முன் வைப்புத் தொகையினையும் செலுத்தி உள்ளேன்.*

*நான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கீழ்கண்ட உறுதி மொழியினை தெரிவித்துக் கொள்கிறேன்.*

1) *நான் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட இதே புலன் எண்.44–ல் உள்ள விவசாய விண்ணப்பத்திற்கு சாதாரண மின் இணைப்பு வரிசை தவிர சுயநிதி திட்டத்தின் கீழ் நானே என் வாரிசுதாரரோ விவசாய மின் இணைப்பு கோர மாட்டேன்.*
2) *இந்த புதிய மின் இணைப்பிலிருந்து விவசாயத்திற்கு மின்சாரம் எடுக்க மாட்டேன்.*
3) *மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள்முதல் குறைந்தபட்சம் ஒரு வருட காலங்களுக்கு முழு திறனில் பயன்படுத்துவேன்.”*

**10.9** மேற்கண்ட உறுதிமெழிகளின்படி மின் இணைப்பு பெற உறுதிக் கூறுகிறேன். மின்சார வாரிய சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுகிறேன்.

10.10 மேற்கண்ட உறுதி மொழி பத்திரத்தை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மேல்முறையீட்டாளர் கீழ்கண்ட உறுதி மொழியை வழங்கியுள்ளது தெரிய வருகிறது.

**10.11** ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட இதே புல எண் 440ல் உள்ள விவசாய விண்ணபத்திற்கு சாதாரண மின் இணைப்பு வரிசை தவிர சுயநிதி திட்டத்தின் கீழ் அவரோ அவரது வாரிசுதாரரோ விவசாய மின் இணைப்பு கோரமாட்டோம்.

**10.12** மேற்கண்ட உறுதி மொழியின் படி அவர் தற்பொழுது சுயநிதி மின் திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு கோர முடியாது. ஆனால், சுயநிதி திட்டத்தின் கீழ் ஒரு விவசாய மின் இணைப்பு பெற வேண்டும் எனில், அதே சர்வே நம்பரில் வேறு மின் இணைப்பு பெற வேண்மெனில் இது போன்ற உறுதி மொழி கொடுக்கப்பட வேண்டும் என்று விதி உள்ளதா என்று ஆராய வேண்டியது உள்ளது. விவசாய மின்னிணைப்பு சுயநிதி திட்டத்தில் வழங்குவது சம்பந்தமாக மின்சார வழங்கல் தொகுப்பு மற்றும் மின்சார பகிர்மான விதித்தொகுப்பு இனங்களில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர்கள் ஏற்படுத்திய விதிகளைத்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டியது உள்ளது, இது சம்பந்தமாக சுயநிதி திட்டத்திற்கான விதிமுறைகளைஆராய வேண்டும். சுயநிதி திட்டத்திற்கான விதிமுறைகள் **14–2–92** நாளிட்ட உறுப்பினர் பகிர்மானத்தின் குறிப்பாணையில் விவரிக்கப்பட்டுள்ளது. அந்த குறிப்பாணை எண் SE/RE&I(O)/D/SES/6077/92-SE Con 697 (Tech Branch) dt.

14-2-92ல் உள்ள தேவையான பத்திகள் குறிப்பாணையிலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

"(i) *The scheme will be applicable to all the agriculture service aplications. The scheme will be called as 'self financing scheme' in short SFS.*

*(ii) Under the above scheme, special priority would be given to the agricultural applicants who come forward to bear the actual cost of extension Or Rs.25,000 whichever is higher . Such applicants will also pay Rs.150/- per Horse Power per annum to meet the operational cost of Tamil Nadu Electricity Board. Regarding mode of collection of Rs.150/- per Horse power per year separate instructions will be issued from Accounts Branch.*

*(iii) For the purpose of eliciting the willigness of the applicants for the above scheme the Exe. Engineer/O&M shall issue a 30 days notice of intimation to all the registered applicants as per form enclsoed to this memo through acknolwedged post. Besides this, arrangments shall also be made to publish the intimation in the notice boards of office of Superintending Engineer, Exe. Engineer/O&M , Assistant Exe. Engineer/O&M and seection offices and in the Government offices like block development office, district development office, district agricultural offices and the collectorate.*

*(iv) The agricutlral applicants who are willing to avail the service connection through this scheme shall give a consent letter as per form II enclsoed to this memo and also remit Rs.500/- (Rupees five hundred only ) either by cash or by demand draft drawn in favour of SE/TNEB on a local bank of the ara before the expiry of 30 days notice. Reciepts for the above sum will be issued at the section office Then the section officer will prepare the estimate in the order of priority of remitance of the deposit at the section office and obtain sanction of the competent authority. After sanction of estimate, the Exe. Engineer/O&M shall issue 60 days notice of intimation to remit the cost of estimate (R.s25000/-) or the actual cost whichever is higher) less Rs.500/- either by cash or by demand draft drawn in favour of SE/TNEB and in the local bank of the area for which when paid at the section office a separate receipt will be issued to the applicant by the Inspector of Assessment. In the case of the applicants who give consent and pay Rs.500/- but do not remit the estimated cost within 60 days the sum of Rs.500/- will be forfieted. The date of remittance of the estimate cost less Rs.500/- will be the date of priority for effecting supply. A*

*separate priority register shall be maintained for this scheme both in section office and division office.*

*(v) The cases of applicants who are not willig to opt for this scheme shall be considered under normal priority. "*

10.13 மேற்கண்ட ஆணையின்படி இந்த சுயநிதி திட்டத்தின் கீழ், விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு விவசாய மின் இணைப்பு விண்ணப்பங்கள் அனைத்தும் தகுதிபெறும் என்று தெரிகிறது. மேலும், விண்ணப்பதாரர்கள் சுயநிதி திட்டத்தின் கீழ் வருவதற்கு தங்களின் சம்மதத்தை தெரிவித்து ரூ.500/– பதிவு கட்டணமாக செலுத்தினால், அவர்களின் விண்ணப்பம், சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் என்றும் அறிய முடிகிறது. மேற்கண்ட ஆணையில், திட்டத்திற்காக கட்டவேண்டிய தொகையில் பிற்காலங்களில் மாற்றம் ஏற்படுத்தி திட்டத்தின் பெயரை திருத்தியமைக்கப்பட்ட சுயநிதிதிட்டம் என்று மாற்றப்பட்டுள்ளது என்று, அறிய முடிகிறது அதன் விதிமுறைகள் உறுப்பினர் பகிர்மானத்தின் குறிப்பாணை எண்.SE/RE/&I(D)/RE(2)/D/FSFS/Revised/Dno253/95(Tech Branch) Dt.20.3.95இல் கொடுக்கப்பட்டுள்ளது, அந்த ஆணையின்படி, விவசாய மின் இணைப்பு கோரும் அத்தனை விண்ணப்பங்களுக்கும் சுயநிதி திட்டத்தில் கோருவதற்கு தகுதி உள்ளது என்ற விதியில் வேறு மாற்றமில்லை என்றும் அறிய முடிகிறது. மேலும், விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ளவர், அதன்பிறகு, அதே நிலத்தில் வேறு மின் இணைப்பு பெற விரும்பினால் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய விண்ணப்பத்தை பதிவு செய்யமாட்டேன் என்ற உறுதிமொழி தரவேண்டும் என்ற நிபந்தனை எதுவும் இல்லை என்றும் தெரிகிறது.

10.14 எனவே, சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு கோரமாட்டேன் என்று முத்திரை தாளில் உறுதி மொழி வாங்கியுள்ளது. வாரியத்தின் சட்டத்திட்டங்களின்படிதான் என்று எதிர்மனுதாரரால் நிருபிக்கப்படவில்லை.

10.15 ஆனால் எதிர்மனுதாரர், விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பதாரர்கள், சுயநிதி திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு தொகையை குறைப்பதற்காக அதே சர்வே எண்ணில் ஒரு தொழில் மின் இணைப்போ அல்லது வேறு மின் இணைப்போ பெற்றுக் கொண்ட பின், சுய நிதித்திட்டத்திற்கு விருப்பம் தெரிவித்து பதிவு செய்து, விவசாய மின் இணைப்பை சாதாரண வரிசையில் செலவாகும் தொகையில் துரிதமாக சுயநிதி திட்டத்தின் கீழ் பெறுவதற்கான குறுக்கு வழியாகும் என்று தெரிவித்துள்ள கருத்து கவனிக்கப்பட வேண்டிய கருத்தாகும். ஆனால் அதுபோன்ற நிகழ்வுகளை உரிமம்தாரர் விரும்பவில்லை எனில், அவர்கள் உரிய அதிகாரம் பெற்ற அமைப்பிடம் முறையிட்டு, தக்க விதியை உருவாக்கி கொள்ள வேண்டும்.

அதை விடுத்து முத்திரை பத்திரத்தில் உறுதி மொழி செய்து கொண்டதால், சுயநிதி திட்டத்தின் கீழ் விண்ணப்பத்தை பதிவு செய்ய முடியாது என்பது விதிமுறையின்படி சரியல்ல என்பது என்னுடைய கருத்தாகும்.

## 11 வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு:–

11.1 எதிர் மனுதாரர் சர்வே எண் 440ல் ஒரு ஆழ்குழாய் கிணறுதான் உள்ளது என்றும், அந்த ஆழ்துளை கிணற்றில் முந்திரி தோல் அரவை ஆலைக்கு தேவையான நீரை வழங்குவதற்கான 15 HP திறனுள்ள பம்பு செட் "பயன்படுத்துவதால், அந்த ஆழ்துறை கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வழங்க முடியாது என்று தெரிவித்தார்.

11.2 மேல்முறையீட்டாளரும், 15 HP திறனுள்ள பம்புசெட் அந்த ஆழ்துணை கிணற்றின் உபயோகத்திலுள்ளது என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால், தான் அந்த பம்புசெட்டை அந்த ஆழ்துணை கிணற்றிலிருந்து தேவையெனில் அப்புறப்படுத்தி விடுவதாகவும், அதன்பிறகு அந்த கிணற்றில் விவசாய மின் இணைப்பு தரலாம் என்று வேண்டினார்.

11.3 விவசாய மின் இணைப்பிற்கு தேவை கிணறு. அது திறந்த கிணறு (open well) அல்லது ஆழ்துளை கிணறு (borewell ) ஆகவும் இருக்கலாம். விவசாயத்திற்கு பயன்படும் கிணற்றில் வேறுபயன்பாட்டிற்கு தேவையான நீரை இறைக்க அந்த பயன்பாட்டிற்கு தகந்த மின்கட்டணப்படி (tariff) வேறு ஒரு மின்னிணைப்பும் பெற்றுக் கொள்ளலாம் என்று மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணை எண்.1/2012, நாள் 30.3.2012இல் கூறப்பட்டுள்ளது. எனவே ஒரே கிணற்றில் விவசாயம் அல்லாத மின்கட்டணப்படி (tariff) ஒருவர் மற்றொரு மின்னிணைப்பு வழங்குவதற்கு விதிகளில் இடமுள்ளது. ஆனால், ஆழ்துளை கிணற்றில் இரண்டு மின் இணைப்புகள் பயன் படுத்துவதற்கு வசதியில்லை. எனவே இருக்கும் ஆழ்துளைக் கிணறு தொழில் மின் இணைப்புக்கு பயன்படுவதால், விவசாய மின் இணைப்பு வழங்குவதற்கு மிகவும் அத்தியவசமான கிணறு இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது. எனவே விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு அந்த விண்ணப்பம் தகுதி அற்றது என்று தெரிகிறது. எனவே எதிர் மனுதாரரின் விவாதமான, தற்பொழுதுள்ள ஆழ்துளை கிணற்றில் ஏற்கனவே தொழில் மின் இணைப்பிற்கான மின் மோட்டார், நிறுவப்பட்டு தண்ணீர் இறைக்கப்படுவதால், விவசாய மின் இணைப்பு அந்த ஆழ்துளை கிணற்றிற்கு வழங்க முடியாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

12. <u>முடிவுரை:—</u>

12.1 மேற்கண்ட பத்தி 12ல் இரண்டாவது வழக்கெழு வினாவிற்காக தீர்வின்படி, மேல் முறையீட்டாளரின், விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணபத்திற்கு, கிணறு இல்லை என்பதினால், மேல்முறையீட்டாளரின் முறையீட்டு மனு எண். 2 / 2013 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வுடன், மனு எண் 2 / 2013 மின்குறை தீர்ப்பாளரால் இறுதி முடிவு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1. திரு. N. இராமசந்திரன்,
த/பெ. நாராயணன்,
கீழக்குப்பம், நடுக்குப்பம் அஞ்சல்,
காடாம்புலியூர் வழி
பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

2. மேற்பார்வை பொறியாளர்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
காப்பர் மலை,
கடலூர் – 607 004.

3. தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
கடலூர் மின்நுகர்வோர் குறைதீர் மன்றம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
காப்பர் மலை,
கடலூர் – 607 004.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

5. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

6. உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.